**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 -ம் நாள் வியாழக்கிழமை

**O.S. No. 43/2024**

பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW.1ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS)., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவக்குமார் | தாலுக்கா | : | குடவாசல் |
| த/க/பெ. | : | ஆறுமுகம் | கிராமம் | : | மஞ்சகுடி |
| | | | தொழில் | : | Real estate |
| | | | வயது | : | 48 |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் புதுக்குடி வருவாய் கிராமத்தில் உள்ளது. பஞ்சாப கேச உடையார் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். பஞ்சாப கேச உடையார் தாவா சொத்தை பொறுத்து 1960 மற்றும் 1961 ல் கிரய ஆவணம் பதிவு செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் பரப்பளவு என்ன என்றால் 14 ஏர்ஸ் ஆகும். தாவா சொத்தின் நான்கெல்லை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பஞ்சாப கேச உடையாருக்கு இரண்டு மகன்கள் உள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர்களின் பெயர் பழனிவேல் உடையார் மற்றும் செல்வராஜ் உடையார் ஆகும். செல்வராஜ் உடையாரின் வாரிசுகள் யார் என்று தெரியுமா என்றால் தெரியும். 1982 ல் பஞ்சாப கேச உடையார் அவரது மகன்கள் இருவருக்கும் ஒரு பதிவு செய்த உயில் ஆவணம் எழுதி வைத்தது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்து குறித்து 1,2 வாதிகள் மற்றும் செல்வராஜ் மனைவி ரேணுகா ஆகியோர்க்கும் வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்து எனக்கு எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்றால் பழனிவேல் உடையார் குருசாமி மகன் ஆறுமுகம் என்பவருக்கு 1993 ஆம் ஆண்டு எழுதி கொடுத்தார், ஆறுமுகம் என்பவரிடமிருந்து 1995 ல் நான் வழக்கு சொத்தை கிரய உடன்படிக்கை செய்து கொண்டேன். நூர் முகமது என்பவருக்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் உள்ளது என்றால் உள்ளது. வருவாய் ஆவணங்களில் நூர் முகமது பெயர் உள்ளது. மேற்படி வழக்கு சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் என் பெயரிலும், எனது மனைவி பெயரிலும் உள்ளது.

வழக்கு சொத்து நான் எனது மனைவியின் பெயரில் தான செட்டில்மென்ட் எழுதி வைக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ. 7 ஆவணமான தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் முத்துசாமி என்று குறிப்பிட்டுள்ள நபர் யார் என்றால் எனது பாட்டனார் ஆவார்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க நீதிமன்ற அனுமதியின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 10:35:37 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.